2011 ஜனவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

நீதிமன்ற வளாகம்

***45081—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பழனியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக 382.59 இலட்சம் ரூபாய் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.*

திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி மக்களின் நீண்ட நாள் கனவுத் திட்டமான ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர், என் பாசத்திற்குரிய தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும், மிகுந்த நன்றியை சமர்ப்பிக்கிறேன். பணிகள் இந்த நிதியாண்டிற்குள் தொடங்கப்படுமா; பணிகள் எப்போது முடிவடையும்; சட்டமன்ற உறுப்பினர் அந்த நிகழ்ச்சிக்கு முறையாக அழைக்கப்படுவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-8-2010 அன்றுதான் அதற்கான G.O. போடப்பட்டிருக்கிறது. அதையடுத்து தொடர்ந்து நில ஆர்ஜிதம் எடுக்கப்பட்டு, பிறகு estimate போடப்பட்டு, tender விடப்பட்ட நிலையிலே இருக்கிறது. முடியுமானால் தேர்தலுக்கு முன்னாலேயே அதற்கு அடிக்கல் நாட்டுகிற விழா நடத்தலாம், மாண்புமிகு உறுப்பினர்கள் அழைக்கப்படுவார்கள்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பழனியில் விரைவு நீதிமன்றம் அமைக்க ஆணை வழங்கியதற்கு மீண்டும் என் சார்பிலும், என் தொகுதி மக்கள் சார்பிலும் நமது அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் 1,500 வழக்குகள் தேக்க நிலையில் இருப்பதைக் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ள இவ்விரைவு நீதிமன்றம் அமைய போதிய இடவசதி இல்லாததால் நிலுவையில் உள்ளது. விரைந்து வாடகைக் கட்டடத்திலாவது இயங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்மூலம் மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.